மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 24/2022**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.பாண்டிசிவகாமி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : கற்பகவள்ளி (வா.சா.1)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

10.03.2026

**முதல் விசாரணை –**

இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். உடன் இணைந்த அசல் வழக்கு எண்.47/2022ல் 2ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

1. 03.01.1985ம் தேதியிட்ட தாவா சொத்துக்கள் உள்ளிட்ட வேறு பல சொத்துக்களுக்கு அம்பலம் பெயரில் உள்ள பட்டா அசல் **வாசாஆ1** ஆகும்.

2. 08.11.1993ம் தேதியிட்ட அம்பலத்தின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ2** ஆகும்.

3. 18.11.2005ம் தேதியிட்ட அம்பலத்தின் வாரிசு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ3** ஆகும்.

4. 04.01.2009ம் தேதியிட்ட சின்னபொன்னின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ4** ஆகும்.

5. 29.12.2012ம் அன்னபூரணத்தின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ5** ஆகும்.

6. 26.08.2010ம் தேதியிட்ட தாவா சொத்துக்கள் உள்ளிட்ட வேறு பல சொத்துக்களுக்கு பூவுலகன் பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வாசாஆ6** ஆகும்.

7. 30.01.2014 மற்றும் 01.11.2017ம் தேதிகளிட்ட தபசு சொத்து உள்ளிட்ட பட்டா 1322ல் உள்ள சொத்துக்களுக்கு பூவுலகன் பெயரில் ஏற்பட்ட தீர்வை ரசீதுகள் அசல் **வாசாஆ7** ஆகும்.

8. 14.07.2021 தேதியிட்ட தபசு சொத்துக்கள் குறித்து வாதிக்கு பூவுலகன் ஏற்படுத்திக் கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் கணினி **வாசாஆ8** ஆகும்.

9. 14.07.2021 தேதியிட்ட தபசு சொத்துக்களுக்கு பூவுலகன் பெயரில் இருந்த பட்டா வாதி பெயருக்கு மாறியதற்குரிய பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் **வாசாஆ9** ஆகும்.

10. 05.07.2022ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதி பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வாசாஆ10** ஆகும்.

11. 11.10.2021ம் தேதியிட்ட தாவா சொத்துக்களுக்கு வாதி தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீது அசல் **வாசாஆ11** ஆகும்.

12. 02.07.2022ம் வாதியின் கணவர் பூவுலகனுக்கு விருதுநகர் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு காவல் நிலையத்தில் இருந்து வந்த அழைப்பாணை சார்பு நகல் **வாசாஆ12** ஆகும்.

13. வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ13** ஆகும்.

14. தாவா சொத்திற்குரிய சொத்து வழிகாட்டி மதிப்பீடு கணினி நகல் **வாசாஆ14**ஆகும்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)